## நம்மாழ்வார் திருவாய் மலர்ந்தருளிய
## திருவாய்மொழி 1-8 - ஓடும்புள்
### (ஈச்வரன் யாவரிடத்திலும் வாசியில்லாமல் ஆர்ஜவ (செம்மை) குணம் உடையவன் என்று அருளிச் செய்தல்)

2752 * ஓடும் புள்ளேறி * சூடும் தண்துழாய் **
நீடு நின்று அவை * ஆடும் அம்மானே 1

2753 அம்மானாய்ப் பின்னும் * எம்மாண்பும் ஆனான் **
வெம்மாவாய் கீண்ட * செம்மா கண்ணனே 2

2754 கண்ணாவான் என்றும் * மண்ணோர் விண்ணோர்க்கு **
தண்ணார் வேங்கட * விண்ணோர் வெற்பனே 3

2755 வெற்பை ஒன்றெடுத்து * ஒற்கம் இன்றியே **
நிற்கும் அம்மான் சீர் * கற்பன் வைகலே 4

2756 வைகலும் வெண்ணெய் * கைகலந்து உண்டான் **
பொய் கலவாது * என் மெய் கலந்தானே 5

2757 கலந்து என்னாவி * நலங்கொள் நாதன் **
புலன்கொள் மாணாய் * நிலம் கொண்டானே 6

2758 கொண்டான் ஏழ்விடை * உண்டான் ஏழ்வையம் **
தண்தாமம் செய்து * என் எண்தான் ஆனானே 7

2759 ஆனான் ஆனாயன் * மீனோடு ஏனமும் **
தானானான் என்னில் * தானாய சங்கே 8

2760 சங்கு சக்கரம் * அங்கையில் கொண்டான் **
எங்கும் தானாய * நங்கள் நாதனே 9

2761 நாதன் ஞாலம் கொள் * பாதன் என் அம்மான் *
ஓதம் போல் கிளர் * வேத நீரனே 10

2762 * நீர்புரை வண்ணன் * சீர் சடகோபன் **
நேர்தல் ஆயிரத்து * ஓர்தல் இவையே 11

**அடிவரவு:** ஓடும் அம்மான் கண் வெற்பை வைகல் கலந்து கொண்டான்
ஆனான் சங்கு நாதன் நீர் இவை